ISSN 2320-589X

# செம்புலம்

பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ்

விருட்சம் : 3 | நவம்பர் : 2015 | விழுது : 12

## CHEMPULAM

உரூ. 30/-

*An International Tamil Research Quarterly Journal*



ஆசிரியர்

**செம்மூதாய் சதாசிவம்**

# உள்ளுறை


| | |
|---|---|
| சிறுபத்திரிகை மரபும் புதுக்கவிதைக் குறித்த மனப்போக்கும்<br>ச. அன்பு | 04 |
| கம்பராமாயணத்தில் திணை மயக்கம்<br>சா. சுதா | 08 |
| ஐங்குறுநூற்று உள்ளுறை, இறைச்சி பாடல்களில் முன்னம்<br>மா. திருமுருகன் | 10 |
| கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் வணிக அறம்<br>ந. மகாதேவி | 13 |
| பழந்தமிழகத்தில் காணலாகும் இறப்பு மற்றும் ஈமம் சார்ந்த நம்பிக்கைகள்<br>த. தினேஷ் | 16 |
| நான்மணிக்கடிகை உணர்த்தும் கற்றோர் மேன்மை<br>ஆ. சுரேஷ் | 20 |
| வேலூர் ம. நாராயணன் கவிதைகளில் தமிழினச் சிந்தனைகள்<br>வெ. ரா. மீனாட்சி | 23 |
| கவிஞர் மேத்தாவின் புதுக்கவிதைப் போராட்டம்<br>சு. தீபா | 26 |
| குடும்ப விளக்கில் உணவுப் பழக்கம்<br>முனைவர் ஜோ. அருணாதேவி | 30 |
| சேனாவரையர் உரைத்திறன்<br>கோ. சுந்தராம்பாள் | 34 |
| திருக்கோயில் வழிபாட்டு முறைகள்<br>ப. பிரியா | 38 |
| சித்தர்கள் காட்டும் நெறி முறைகள்<br>ப. சுபத்திரா | 40 |
| அற இலக்கியங்களில் - மழலையின் மகிமை<br>முனைவர் க. முத்தழகி | 44 |
| எழுச்சிக் கவிஞர் 'சினேகன்' பன்முகப் பார்வை<br>முனைவர் மோ. கிறிஸ்டி | 47 |
| அற இலக்கியங்களில் கள்ளுண்ணாமை<br>முனைவர் மு. புஷ்பரெஜினா | 50 |
| கீழ்க்கணக்கு அற நூல்களில் காணலாகும் ஒழுக்கத்தின் மேன்மை<br>ப. கதிரவன் | 53 |
| திருக்குறள் நாலடியார் கூறும் அறமே செல்வம்<br>ப. தமிழ்க்கனி | 56 |
| கலைஞர் கவிதைகளில் புரட்சிகள்<br>பு. வழியரசன் | 59 |
| நாமக்கல் கவிஞரின் மொழித்திறன்<br>எ. இராஜேஷ் | 61 |
| மதுரைக் காஞ்சி காட்டும் சமூகம்<br>பா. சிவரஞ்சனி | 64 |
| மலரும் மஞ்சமும் - ஒரு திறனாய்வு [உயிர்ச்சக்தி + ஊட்டச்சக்தி + ஊக்கச்சக்தி = காதல்]<br>முனைவர் க.மாரியப்பன் | 68 |
| செம்மொழிகளுள் தமிழ் [தாய்]<br>இரா. அருணா | 72 |
| பேரூர்ப் புராணத்தில் அணிகள்<br>கு. சிரஞ்சீவி | 75 |
| மணிமேகலை காட்டும் ஐவகைச் சீலம்<br>முனைவர் கா.மீரா | 78 |
| ஆண்டாள் பிரியதர்ஷினியின் புனைகதைகளில் மனிதநேயம்<br>க. புஷ்பலதா | 81 |
| திருவள்ளுவரின் பார்வையில் மழலைச் செல்வம்<br>சி.அழகேசன் | 84 |

# மணிமேகலை காட்டும் ஐவகைச்சீலம்



முனைவர் கா.மீரா

தமிழ்த்துறைத் தலைவர்,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்

பழந்தமிழ் ஆடவருள் சிலர் கள்ளுண்ணல், புலால் உண்ணல், பரத்தையரிடம் செல்லல், களவாடல் போன்றவற்றில் ஈடுபட்டு களியாட்ட வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். வசதி படைத்த ஆண்கள் பரத்தையர்களுடன் கூடி வாழ்ந்தனர். போர் வீரர்கள் வெற்றி வாகை சூடி அதனைக் கொண்டாடும் விதமாகக் கள்ளுண்டு களித்தனர். பாலை நிலமக்கள் வழிபறிக் கொள்ளையில் ஈடுபட்டனர். இவை குற்றமாகக் கருதப்படவில்லை. சமூகச் சீர்திருத்தவாதியான வள்ளுவப் பெருந்தகையே இவையாவும் தவறெனக் கண்டிக்கிறார். திருக்குறளுக்குப் பின்னர் எழுந்த நீதி இலக்கியங்களும், பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலைக் காப்பியமும் குறட்பாக் கருத்தையே போற்றி உரைக்கின்றன. கள், புலால், களவு போன்றவற்றைத் தவிர்ப்பதை மணிமேகலைக் காப்பியம் ஐவகைசீலம் என்றுரைக்கிறது. இவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஐவகைசீலம் - விளக்கம்

கள், பொய், காமம், களவு, கொலை ஆகிய குற்றங்கள் ஐந்தையும் நீக்கி வாழ்வதே ஐவகைசீலம் எனப்படும். அதுவே பேரறமாகக் கருதப்பட்டது. கள்உண்பதும், பிற உயிர்களைக் கொன்று தின்பதும் நல்லறங்கள் ஆகாது. மாறாக இவை பாவச் செயல்களே. அறம் செய்வோர் சுவர்க்கம் புகுவர். பாவம் செய்வோர் நரகம் அடைவர். ஆதலால் பாவத்தை ஒழித்து புண்ணியம் செய்ய வேண்டும் என்பதை மணிமேகலைக் காப்பியம் வலியுறுத்துகிறது.

சோழஅரசி, தன்மகன் இறப்பிற்கு மணிமேகலையே காரணம் எனக்கருதி பல இன்னல்களைத் தர அவை எதுவும் அவளைத் தாக்கவில்லை. தன்மகன் காமத்தாலே இறந்தான் என்பதையுணர்ந்த அரசிக்கு ஐவகைசீலத்தை எடுத்துரைக்கிறாள்.

## காமத்தின் கொடுமை

மனிதன் ஐம்புலன்களையும் அடக்கி வாழவேண்டும். ஐம்புலன்களில் ஒன்றான உடலின்பம் காண விழைதலே காமமாகும். மனைவியோடு கூடிப்பெறும் இன்பம் என்பது வேறு. மனைவி இருக்க மாற்றாளின்மீது இச்சைக் கொள்வது காமமாகிறது. காமம் மேலிட்டால் அழிவே ஏற்படும். சோழ இளவரசன் மடிந்ததற்குக் காரணம் மணிமேகலையின் மீது கொண்ட காமமே என்பதை,

**“தன்மண் காத்தன்று பிறர்மண் கொண்டன்**
**றென்னெனப்**

**படுமோ நின்மகன் மடிந்தது”** *(மணி,23:17-18)*

என்ற அடிகள் உணர்த்தும். மேலும் காமத்தால் விளையும் இன்னல்கள் பலவற்றை மணிமேகலைக் காப்பியம் கதைவழி உணர்த்துகிறது. ஓர் அரசனின்

கொடுங் கோலாட்சியினால் மக்களின் இல்லற வாழ்க்கை சீர்குலைந்தது. ஓர் ஆடவன் தன் மனைவியை கைவிட்டுவிடுகிறான். அவள் வாழவழியின்றி பரத்தையாக மாறுகிறாள். குழந்தை அந்தணனால் வளர்க்கப்பட்டு பெரியவனாகிறான். காமமேலீட்டால் தாயென்றும் அறியாமல் அவளோடு கூடி இன்பம் துய்க்கிறான். பிறகு தாயெனத் தெரிந்ததும் உள்ளம் குமுறி உயிரை விடுகிறான் (மணி, *23:104-111*). காமம் கண்ணையும் கருத்தையும் மறைத்து மிகப் பெருங்குற்றம் நேர்ந்துவிட்டது.

ஆதலால் காமம் கடியத்தக்கது. அதனை விலக்குதல் வேண்டும். புகார்நகர மன்னன் ககந்தனின் ஆட்சியின் கீழ் விசாகை என்பவள் வாழ்ந்து வருகையில் அவளைக் கண்டு மன்னனின் மூத்த மகன் காமுற்றான். அவளுக்குப் பூச்சூட்டத் தான் அணிந்துள்ள மாலையை எடுக்கக் கை உயர்த்த கை அவ்வாறே நின்றது. இச்செய்தியறிந்த மன்னன் தன் மகனென்றும் பாராமல் கைகளைத் துண்டித்தான். அதே போல் மருதி என்ற பார்ப்பன பெண்ணின்மீது காமுற்ற தன் இளைய மகனையும் வாளால்வெட்டி வீழ்த்தி அறத்தை நிலை நாட்டினான் என்பதை,

**"பெட்டாங்கு ஒழுகும் பெண்டிரை போல**

**.....................................................................**

**தாதை வாளால் தடியவும் பட்டனன்"**

(மணி,*23:70-79*)

என்ற அடிகள் உணர்த்தும். ஆதிரையின் கணவன் சாதுவனும் கூடாவொழுக்கம் மேற்கொண்டு நாடகக் கணிகை ஒருத்தியின் வலையில் வீழ்ந்தான். செல்வம் அனைத்தையும் இழந்தான். செல்வம் இல்லாத நிலையில் கணிகையாலும் விரட்டப்பட்டான் என்பதை,

**"சாதுவன் என்போன் தகவிலன் ஆகி**

**...................................................**

**பேணிய கணிகையும் பிறர் நலங்காட்டி"**

(மணி, *16:4-11*)

என்ற அடிகள் உணர்த்தும். காமவெறி கொண்டவர்கள் அழிவையே எதிர்கொள்வர். ஆதலால் காமத்தை விலக்குதல் வேண்டும் என காமவெறி கொண்ட ஆடவர்க்கு அறிவுரைப் பகர்வதாக அமைகிறது.

## கொலையின் தன்மை

சங்கக் காலத்தவர் பிற உயிர்களைக் கொன்று அதனைத் தேனில் தோய்த்து உண்டு மகிழ்ந்தனர். காலம் கடந்து செல்ல சமுதாயத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. தன் உயிரைக் காத்துக் கொள்வதற்கு பிற உயிரைக் கொல்லுதல் தகாத செயல் என்ற எண்ணம் உருவாகத் தொடங்கியது. கொல்லாமை உயர்ந்த அறமாகப் போற்றப்பட்டது. இதனை வள்ளுவர் "ஒன்றாக நல்லது கொல்லாமை" (குறள்.*323*) என்ற குறள் வழி விளக்குகிறார். பிற உயிர்களை வருத்தாதவர்கள் கடவுளுக்கு இணையாகக் கருதப்படுவர் (குறள்.*260*).

மணிமேகலை கொலைத்தொழிலின் பாவத்தை ஒரு கதை வழி உணர்த்துகிறது. வேடன் ஒருவன் காட்டிற்குச் சென்று வேட்டையாடினான். கருவுற்ற மான் ஒன்று நீர் வேட்கையால் நீர் அருந்த குளத்திற்கு வர, அதனை நோக்கி வேடுவன் அம்பெய்தினான். அம்புபட்ட அளவில் மான் கன்று வயிற்றினின்று வெளியே வந்து வீழ்ந்தது. அதனைக் கண்ட தாய்மான் இரத்தக் கண்ணீர் வடித்து பெருமூச்சு விட்டு இறந்தது. இதனைக் கண்ணுற்ற வேடுவன் இக்கொடுமை தன்னால்தானே நேர்ந்தது என உள்ளம் குமுறி உயிரைவிட்டான் (மணி, *23:112-119*). இக்காட்சியிலிருந்து உயிர்க்கொலை செய்தல் பாவம் என்பதும் அச்செயலைத் தவிர்த்தல் வேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

## கள்ளின் மயக்கம்

கள் அதனைக் குடிப்பவரின் கருத்தை மயக்கும் தன்மையது. நம்மைச் சான்றோர்கள் மதிக்கப்பட வேண்டுமானால் கள்ளுண்பதைத் தவிர்க்க வேண்டும் என வள்ளுவர் விழைவதை 'உண்ணற்க கள்ளை' (குறள்.*922*) என்ற குறட்பா வலியுறுத்தும். மேகலைக் காப்பியம் அறிவை மயக்கும் கள்ளையும், நிலையற்ற உயிர்களைக் கொல்லுதலையும் அறிவுடையோர் செய்ய மாட்டார் (மணி.*16:84-85*). என்கிறது. கள்ளுண்பவரின் நிலைப்பற்றிக் கூறும்போது, மது அருந்துபவர் தம் கருத்து மயங்கிய நிலையில் தம் சாவைத் தாமே தேடிக் கொள்வர். மதங்கொண்ட யானை தன்முன் வந்தால் அதனைக்கண்டு ஓடி பதுங்க வேண்டும். இஃது அறிவுடையோரின் செயல். ஆனால் கள்குடித்து மயங்கியவர் மதயானையின் தந்தத்தில் தாமே வீழ்ந்து உயிரை

மாய்த்துக்கொள்வர் (மணி.23:120-123). இது கள்ளுண்ட செருக்கால் விளையும் தீங்காகும். இதன்வழி கள்ளுண்டு மயங்கித் திரிவோர் உயிரிழக்கவும் நேரிடும் என்பது எச்சரிக்கப் படுகிறது.

## பொய்யொழுக்கம்

உண்மைக்குப் புறம்பானது பொய். ஒரு பொய் கூறி அதனால் பலவித நன்மைகள் ஏற்படுமானால் அப்பொய்யும் மெய்யாகவேக் கருதப்படும். அறம் செய்வதற்கு பொருள் தேவைதான். ஆனால் பொய்யாமையைக் கடைபிடிக்க எந்த பொருளும் தேவையில்லை. ஆதலால் பொய் பேசாமையைத் தொடர்ந்து கடைபிடித்தால் பிற தருமங்கள் எதுவும் செய்ய வேண்டாம். இப்பொய்யாமையே அறங்கள் பலவற்றைத் தந்து நிற்கும் (குறள்.297). பொய்யானவரின் வாழ்வில் ஒரு நன்மையும் விளையாது. 'விதைத்தவன் அறுவடை செய்வான்' என்பது போல தீய வழியில் சென்றால் தீமையே உண்டாகும். பொய்யையே தன் வாழ்க்கையில் பொருளெனக் கொண்டவர்கள் மிகவும் துன்புறுவர்.

**"பொய்யாற் றொழுக்கம் பொருளெனக் கொண்டோர்**

**கையாற் றவலம் கடந்ததும் உண்டோ?"**

(மணி, 23:124-125)

பொய்யாமையைக் கைவிடவேண்டும், துன்பத்திலிருந்து நீங்கி வாழவேண்டும் என்பது இதன்வழி பெறப்படுகிறது.

## களவின் கேடு

எந்த ஒரு சூழலிலும் பிறர்பொருளைக் களவாடக் கூடாது. பிறர் பொருளை நம் வல்லன்மையால் கவர்ந்தோமேயானால் நம் பொருளை கடவுள் பறித்துக் கொள்வார். "வஞ்சித்துப் பெறும் உணவு சுவையாயிருக்கும். ஆனால் பின்னர் அது வாய்நிறைய மணல் கொட்டியது போலாகும்" என்று நீதிமொழிகள் பிறருடைமையைக் களவாடாமைப் பற்றி உரைக்கிறது. இத்தகு களவுத்தொழிலை மேற்கொண்டவர் இறுதியில் துன்பத்தை அடைவாரே தவிர ஒருபோதும் இன்பத்தை அடைய மாட்டார். "களவேர் வாழ்க்கையர் உறுஉங் கடுந்துயர்" (மணி,23:26) என 'களவால் விளைவது துன்பமே' என்பதை மணிமேகலை எடுத்துரைக்கிறது.

## முடிவுரை

காப்பியத்தலைவி மணிமேகலை சோழ அரசி ராசமாதேவியிடம் மேற்கூறிய ஐந்து குற்றங்களையும் நீக்கி வாழ்வதே அறம் என போதிக்கிறாள். இன்றைய காலக்கட்டங்களில் கள்,கொலை போன்ற வன்முறைகள் அதிகமாக நடைபெறுகின்றன. ஆகையால் நடைமுறையில் வாழும் மக்களும் இச்சீலத்தைக் கடைபிடித்து நல்லதொரு சீர்திருத்த வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். அவரவர் செய்த நல்வினைகளே இறுதிவரை துணைநிற்கும் என்ற கருத்தினை மணிமேகலைக் காப்பியத்தில் சாத்தனார் காட்டும் திறம் உய்த்துணரத்தக்கது.

## ஆய்வாளருக்கு வழங்கப்பட்ட மரியாதை

டாக்டர் பொற்கோ துணைவேந்தராக இருந்தபோது நிகழ்ந்த ஒரு சம்பவம் நினைவு கூறத்தக்கது. முனைவர் பட்ட ஆய்வாளர் ஒருவர் ஆய்வேடு சமர்ப்பித்துவிட்ட நிலையில் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் மரணப் படுக்கையில் இருந்தார். அவருக்கு கண்டிருந்த நோய் மருத்துவர்களால் குணப்படுத்த முடியாதது. உயிரைக் காப்பாற்றவியலாது என மருத்துவர்கள் கைவிரித்துவிட்ட நிலை. அப்போது பொற்கோ அவர்களிடம், ஆய்வாளர் தொடர்பு கொண்டு அய்யா பல ஆண்டுகள் கடும் முயற்சி செய்து ஆய்வேட்டை முடித்த எனக்கு நெடுநாள் கனவாகிய டாக்டர் பட்டம் கிடைத்து விடுமானால் நான் நிம்மதியாகப் போய்ச் சேர்ந்துவிடுவேன், உதவி செய்யுங்கள் என்று கேட்கிறார்.

அந்த ஆய்வாளரின் கோப்புகளைப் பரிசீலனைக்கு உட்படுத்திப் பார்க்கையில் புறத்தேர்வாளர்களின் அறிக்கையும் நல்லபடியாகவே வந்திருந்தது. உடனே துணை வேந்தராக இருந்த டாக்டர் பொற்கோ, பதிவாளர், தேர்வாணையர், நெறியாளர், புறத்தேர்வாளர் என கண்ணியம் மிக்க ஒரு குழுவோடு ஆய்வாளர் இருந்த மருத்துவமனைக்கே சென்று வாய்மொழித்தேர்வை நடத்தி, அதற்கான கடிதத்தையும் உடனடியாக ஆய்வாளருக்கு வழங்கினார். அவரும் அடுத்த சில நாட்களில் நிம்மதியாக கண்மூடினார். நெஞ்சை நெகிழ வைத்த இந்நிகழ்வை அன்றைய பத்திரிக்கைகள் வெகுவாகப் பாராட்டின. எழுதின.

ஆசிரியர்,

**செம்மூதாய் சதாசிவம்**

Owned and published by Dr. S. Sathasivam from. No.17, Tagore Street,
MMDA Nagar, Chitlapakkam, Chennai - 600 064. and printed by R. Venkatesan at
Anbu Achakam, 22/12, South Mada Street, Chinna Kancheepuram - 631 501.
Editor - Dr.S.Sathasivam.

